CATTLE WELFARE IN MADRAS STATE

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

ISSUED BY
THE DIRECTOR OF INFORMATION AND PUBLICITY
GOVERNMENT OF MADRAS
1955

Price, 2 annas.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

FOREWORD

This publication is intended to make available to the general public, information on the various schemes and measures which are being implemented by the Government for the development and welfare of livestock in our State. In an agricultural country like ours cattle play a very important part. Our prosperity and economic welfare depend largely on the well-being of our cattle. Though the potentialities of our cattle are tremendous, their quality is low due to ill-breeding and ill-feeding and general lack of care. The reader will realize that despite the great strain on their financial resources, the Government have during the last six or seven years undertaken a large number of schemes mainly with a view to upgrade our livestock and increase their milch and draught qualities. It should be the aim of every farmer to improve his cattle wealth by scientific breeding, proper feeding and care and to make maintenance, of cattle a profitable concern. This objective cannot be achieved by the Government unilaterally carrying out certain schemes to that end.

The responsibility for achieving the objective rests in a large measure with the general public who I am sure will take full advantage of the facilities provided by the Government and do their best for the development and welfare of our cattle.

M. Bhaktavatsalam

MADRAS,
11*th January* 1955.

Minister for Agriculture.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

CATTLE WELFARE
IN
MADRAS STATE

India's rural economy largely depends on the cattle wealth of the country which is vital in the daily life of the peasant and the farmer.

Everybody knows that the cow is looked upon as a sacred animal in this country by a majority of the people. The cow is the source of the life-giving food element, viz., milk and it is the source which yields the largest motive power, viz., bullocks used for agriculture and transport by seventy-five per cent of the population, who form the backbone of the country. Cattle are also useful in various other ways. From time immemorial, farm-yard manure has been the cheapest and most fruitful means of revitalizing the soil for agriculture. The hide, horn and hoofs, not to mention the beef (used not only for food, but for tallow and other commercial uses) of the cattle are commercially profitable raw material, even after the cattle are dead. From ancient times, this land of ours was described as the land flowing with honey and milk. That only indicates the prosperous condition of cattle in the olden days and how much they were cared for. The bull was a symbol of strength Both the cow and the bull were held in veneration and treated and reared with care and kindness. The availability of ample fodder and pasture lands made it possible to keep them well-fed. But with the passage of time and the increase in population, pasture lands were converted for cultivation purposes Consequently, the area for the grazing of cattle quickly diminished, adversely affecting the health of the cattle. This progressive deterioration continues even now. To-day though India possesses the largest cattle population in the world, they are perhaps the poorer in health and quality. It is an amazingly regrettable feature that out of the 193 million cattle in this country, a tenth is entirely unproductive. Indiscriminate breeding and undernourishment are responsible for the low quality of the cattle.

The livestock in Madras State is no exception in this matter. The total cattle population in this State is 14·6 millions besides 12·6 millions of sheep and goats. The welfare of these cattle, is a matter of vital concern to the people and the State because of its close connexion with agriculture which is the main occupation of over 80 per cent of our population. One of the important subjects which has claimed the special attention of the Governments both at the Centre and in the State during the post-Independence period is the promotion of cattle welfare. Madras State, which has long been devoting some attention to this problem, has during the past seven years after the attainment of freedom, redoubled its efforts in improving the State's cattle wealth and welfare.

The improvement of cattle consists among other things in the selection of high class bulls and their utilization for upgrading the pedigree of animals, the provision of an adequate quantity of well-balanced food and the complete control of diseases that periodically take a heavy toll of the cattle population.



A PRIZE WINNER.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956

Even before India attained independence, the following schemes aimed at the upgrading of cattle were in force :—

(1) Premium scheme.
(2) Male stock distribution scheme.
(3) District board scheme.

The Government were also maintaining a Livestock Farm at Hosur for the breeding of suitable breeds of cattle. After Independence, the Government while continuing the above measures have also instituted other schemes for the upgrading of cattle and their maintenance free from diseases.

(1) *Premium scheme.*—Under this scheme approved bulls maintained by ryots or institutions at their cost for stud purposes are paid a subsidy or premium as it is called, of Rs. 100 per annum in the case of bulls and Rs. 220 per annum in the case of buffalo bulls for their maintenance in good condition, provided the bull had performed a minimum service of 40 in the first year and 60 in the subsequent years.

(2) *Male stock distribution scheme.*—Young bulls and bulls tested for service are given free to suitable custodians for maintenance and for service in the locality. The custodians are not paid any subsidy for their maintenance but allowed to charge for the services rendered by the bull. The bull will become the property of the custodian if it completes 180 services or within a period of three years whichever is later. As against 16 bulls distributed during 1947–48, as many as 151 bulls have been distributed during the year 1954–55.

(3) *District board scheme.*—The district boards purchase bulls for distribution in the district in consultation with the local Veterinary Officer. The Government bear a portion of the cost not exceeding half the cost of the bulls purchased and the bulls so distributed become the property of the custodian in accordance with the conditions of the Government Livestock Distribution Scheme.

LIVESTOCK FARM AT HOSUR.

The chief function of the Research Station, Hosur, is the production of stud bulls of approved breeds. It also serves as demonstration farm for selective breeding, proper feeding and good management. This farm is the largest in the State. It

has an area of 1,635 acres, part of which is used for cultivating fodder crops and grass and part as pasture land. The breeds maintained include (1) Kangayam, (2) the Sindhi, (3) the Gir, (4) Hallikars in addition to cross breeds. There were nearly 1,041 head of cattle maintained in the farm on 1st January 1947 as against 1,368 on 1st April 1954. These are distributed according to requirements to other Government institutions and farms, etc., for stud purposes. The surplus animals are sold to the public. There is also a dairy attached to the farm, where milk is processed and milk products are made available for sale.

The basic defect to be remedied regarding cattle population in the State is its poor quality. The livestock census has revealed the significant fact that there were not enough bulls to serve the cows. So it was considered necessary to devise a scheme to remedy this drawback. This scheme is known as Key Village Scheme. Besides this, artificial insemination centres and bull-rearing farms were arranged to be opened. All these improvements formed part of the Five-Year Plan which came into operation in 1952–53. The main features of these schemes are given here.

(1) *The Key Village Scheme.*—A key village is a compact area consisting of one or more contiguous villages with a cattle population of 500 cows or buffaloes or both of breedable age. Pedigree bulls are stationed in each such village and these are maintained by custodians to whom a monthly subsidy of Rs. 30 is paid. All scrub bulls in the village are castrated so that only approved bulls will be available for service thus ensuring the pedigree of the offsprings. The other essential features of the scheme include the maintenance of records of pedigrees and of milk production, scientific feeding and disease control. There is an artificial insemination centre for each group of four Key villages. Four to five bulls of known pedigree are located in the main centre and two bulls in each of the attached villages. At present, there are seven artificial insemination centres, with 28 Key villages. These are manned by experienced Veterinary Assistant Surgeons and Livestock Inspectors. It is needless to say that the success of the Key village scheme depends largely on the measure of public support. Selection of high class bulls from strains which have got acclimatised or which are suitable to particular tracts is one of the important factors for the success of the scheme.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1958
MADRAS



Hosur Cattle Farm Guest House.



Sindhi Bull.



GIR BULL.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



HALLIKAR BULL.



Hosur Cattle Farm Dairy.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



Hosur Cattle Farm—Fodder Crops.

The Government have also sanctioned a scheme for using private institutions as a supplementary agency for bull production. Key Farm Centres have been opened in Palayakottai Cattle Farm, the Narendra Dairy Farm, Madurai, Idayakottai Farm at Idayakottai, the Gandhi Ashram at Kilamungiladi in South Arcot district, the Milk Supply Union, Kilacheri and the Milk Supply Union, Valarpuram. Bulls required in these farms as well as equipments for artificial insemination are supplied to individuals or organizations on loan. These farms are worked by Veterinary Surgeons and Livestock Inspectors. The owners of these farms are paid subsidy for the maintenance of these bulls. The Government of India are contributing 75 per cent of the recurring cost of the scheme. Up to 11th May 1954, the owners of the farms were bearing the remaining 25 per cent of the recurring cost. The Government of Madras with effect from 1st May 1954 is contributing this 25 per cent of the recurring cost.

(2) *Artificial insemination centres.*—Artificial insemination is a new scientific achievement and this State has been one of the first to make use of it. Considering the paucity of quality stud bulls which may not be available in a large number of villages, artificial insemination has come in as an useful and handy method for production of improved livestock. In spite of the initial prejudice and sentimental objection to the method and superstitious ignorance prevailing in the villages, the Government have been able to make use of the method successfully in many rural areas. In the artificial insemination centres the cows which are artificially inseminated yield pedigree bulls. The beginnings were made when a centre was opened in the Madras Veterinary College as early as 1948–49. The results having proved encouraging, additional artificial insemination centres have been opened in Coimbatore town, Ootacamund and Madurai town. The work is now carried on in five sub-centres in Madras City, and three sub-centres in Coimbatore town. The total inseminations carried out in all these centres during 1953–54 were 10,337.

The Government have since sanctioned a scheme for the cross-breeding of cattle in the hilly and heavy rain-fall area of Ootacamund, through artificial insemination of the cattle with semen of foreign breeds. The object of the scheme is to improve the milch quality of the local cattle.



ARTIFICIAL INSEMINATION.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



FINE SPECIMENS OF IMPROVED BREEDS PRODUCED BY ARTIFICIAL INSEMINATION.

Livestock Farms.

In addition to the Hosur Farm in Salem district mentioned earlier, four more farms have been opened since 1946.

(*a*) *The District Livestock Farm in Malabar.*—This was opened in 1950–51. It is situated in Thiruvazhamkunnu at the foot of the Western Ghats and has an area of 350 acres. The breeds stocked in this farm are (1) Sindhi, (2) Sahiwal, (3) Darwar and (4) Murra buffalo. The total strength is about 125.

(*b*) *The District Livestock Farm at Koila in South Kanara.*—This was also opened in 1950–51 with murra buffaloes and a few Sindhis. The farm extends over an area of 760 acres of which 100 acres are cultivable. It maintains a stock of 286 animals.

(*c*) *The Livestock Farm at Pudukkottai.*—This farm was taken over by the Government in 1951–52 after the merger of the Pudukkottai State with this State. The total strength of the animals in this farm is about 140 consisting of Sindhis and Kangayams. The farm extends over an area of seven acres. The question of enlarging this farm and converting it into a mixed farm is receiving the attention of the Government.

(*d*) *The Livestock Farm at Orthanad in Tanjore district.*—This farm was opened in the course of 1954. It extends roughly over an area of 280 acres and is at present stocked with 85 animals including Sindhi and Umbalacheri cows, bulls and she-buffaloes. One of the chief purposes of the farm is to develop the Umbalacheri breed for which Tanjore is noted, and to make it a mixed farm.

The Village Livestock Improvement Scheme.

Another measure taken to ensure the pedigree of bulls is the village livestock improvement scheme according to which all unwanted male stocks in an area are castrated and only approved bulls are made available to the cows. The animals around the area are also safeguarded against diseases. The cows and their progeny are tattooed and necessary records with regard to breeding, pedigree, etc., are maintained. The scheme also provides for the payment of a subsidy of Rs. 5 per mensem for the proper maintenance of heifer



KOILA FARM—SOUTH KANARA.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



PUDUKKOTTAI FARM.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



ONGOLE BULL.

calves born to registered cows. The scheme is being worked in five centres in the State as stated below :—

(1) Saliamangalam in Tanjore district.
(2) Malli in Ramanathapuram district.
(3) Kinnigoli in South Kanara district.
(4) Palladam in Coimbatore district.
(5) Musiri in Tiruchirappalli district.

The first three centres are under the control of the Animal Husbandry Department while the last two are under the Co-operative Department.

SALVAGE SCHEME FOR DRY COWS.

Ensuring a steady supply of efficient bulls is only one aspect of the problem. There is another important aspect, the provision necessary for dry cows during their dry period. The problem is especially acute in the City of Madras. So the Government have started a farm in Kambakkam Reserve Forest not far from Madras where dry cows, which might otherwise have been marched to slaughter houses, are



Calved Cows at Kambakkam.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

Grass Farm (Kambakkam).

salvaged. There are grazing facilities also attached to this farm. Pure-breed bulls are maintained here for the service of the cows. On 1st April 1953, there were 247 cows in the farm. During 1953–54, as many as 274 cows were admitted into the farm. One hundred and ninety-nine cows were returned to the owners after calving and 55 before calving. There were 228 cows at the end of the year.

In addition, a salvage farm for the salvage of dry buffaloes in the City of Madras is maintained at Vattambedu. This farm is managed by the Milk Supply Union, Madras. The Government are financing the scheme by sanctioning the necessary staff and a subsidy towards feeding charges.

SHEEP AND GOAT DEVELOPMENT.

The immense possibility of improving sheep and goat as part of the livestock development programme has also received the attention of the Government. This is an activity which could profitably be undertaken by middle-class ryots in the interior parts in this State. The Government have revived the distribution of pure breeding rams like Bikanir, Nilgiris and Mandya to the ryots free of cost under the Male Stock Distribution Scheme in order to improve the local woolly sheep and the mutton variety. Thirty rams in the different farms will be distributed under this scheme. A scheme of grading up of local sheep in the Hosur taluk with Mandya rams is also under operation. The scheme for carrying on propaganda and demonstration in improved methods of shearing and grading work among sheep owners is being continued in three centres, Madurai, Cuddalore and Coimbatore. The Government are already maintaining a sheep and goat farm at Ootacamund for improving the woolly type of sheep of the Nilgiris. A comprehensive scheme for grading up the local stock with foreign rams for improving its wool quality and for enlarging the farm at Ootacamund by starting a wool grading centre, is under contemplation.

The question of the opening of a sheep farm in Salem district is also under consideration.

POULTRY FARMING.

Poultry breeding is a very gainful occupation and its encouragement has also received the attention of the Government. Exotic breeds of poultry are reared in the Poultry Research Station, Madras, in the Poultry Farm at Cannanore,

HOSUR FARM (SHEEP GRAZING).

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



A PANORAMIC VIEW OF THE SHEEP FARM, OOTACAMUND, WITH ITS OFFICE BUILDINGS AND THE SHEEP GRAZING IN THE PADDOCK.

in the Poultry units attached to the Government Livestock Farm at Hosur and Koila and also in some of the veterinary institutions. The American Arcot Mission at Katpadi which receives a grant is also maintaining a few model village poultry farms. The Government institutions are supplying chicks and eggs for hatching in order to improve local poultry. The Government have recently sanctioned the import from the United Kingdom of thousand one-day chicks of standard breeds, to renew the flocks in the Government farms. This is also a field where private enterprise can do much with considerable profit to itself. It is up to private agencies and co-operative societies to give a lead in this matter.



CONNEMARA PUBLIC LIBRARY 12 JAN 1956 MADRAS

A POULTRY FARM.

CONTROL OF DISEASES.

Cattle welfare includes also provision for safeguarding cattle against pests and diseases which, as in the case of human beings, periodically reduce their numbers. The treatment of sick animals is thus an important activity of the department. Cattle diseases are of various types in origin and behaviour. The major diseases are Rinderpest, foot and mouth disease, the Anthrax and Blackquarter. Of these, Rinderpest is the most dangerous. A network of veterinary

hospitals, dispensaries and touring billets has been organized throughout the State to combat the various kinds of diseases and to advise the ryots on the ways of controlling animal diseases and the management of livestock. The aim of the Government is to have a veterinary institution and touring billet for each taluk. There are at present 86 veterinary hospitals and major dispensaries in addition to 65 minor dispensaries and 20 touring billets in this State. During the year 1954–55, sanction was accorded for the opening of nine more veterinary institutions and seven touring billets with a view to facilitate the prompt diognosis of diseases. Clinical laboratories have been sanctioned for two headquarter veterinary hospitals and one for the Hosur Cattle Farm. A scheme for control and eradication of contagious abortion in animals is also in operation. The Government have also sanctioned a scheme for investigating the causes of cattle sterility. An officer of the Animal Husbandry Department who is to be in charge of the scheme, has been deputed to Norway for undergoing necessary training in the work. A new process of manufacture of vaccines in the dry form has been evolved by which they could be preserved in full potency for longer period. It may be noted here that the control and eradication of cattle diseases is rendered difficult among other things by the apathy of the general public. The Government have been endeavouring to overcome this obstacle. In 1949, four mobile vans were sanctioned to facilitate the quick combating of all major contagious diseases on an intensive scale. The spread of contagious diseases is also sought to be arrested by the application, whenever necessary, of Cattle Diseases Act and Rinderpest Act according to which the movements of animals are controlled in order to facilitate vaccination. There are also three special officers and two assistant disease investigation officers to investigate the diseases of cattle. They are provided with a mobile laboratory for the quick despatch of their work. Research also is being done in regard to animal diseases.

It should be stated that the Government have practically eradicated Rinderpest from this State. In order to guard against the trickling of this disease from the neighbouring States, the Government have since sanctioned a scheme for the setting up of 20 quarantine outposts on the borders of the State for preventive inoculation of the animals brought from other States.

Importance of Fodder Resources.

It is needless to say that one of the important elements in cattle health, as in the case of human health, is food. Proper feeding of animals is one of the basic conditions of their efficiency. And proper feeding depends upon the availability of pasture lands and fodder. The Government had realized this fact and they appointed two special officers, one from the Agriculture Department and the other from the Forest Department, to study the problems connected with fodder supply in the State. Their report was published in 1952. Some of their recommendations have been implemented. There is also a greater realization among the people of the need for raising special kinds of fodder crops like Lucerns, Pillipesara, etc., for supporting cattle. The growing of Kollukottai grass, for example, has gained immense popularity. Sileage making has, however, not gained much headway for one reason or another, the chief reason being ignorance and prejudice. The planting of fodder farms in conjunction with sewage farms is now receiving due attention. In a large measure private breeders and agriculturists owning large numbers of cattle have themselves to pay adequate attention to the development of their fodder requirements for the sake of their cattle. The Government can give only technical advice and assistance. It is, however, their policy that fodder is given its due place in the cropping pattern of irrigation projects and in the farms run by the Government besides asking the municipalities and local boards to start sewage farms.

Public Co-operation.

Mention may also be made that the Government have constituted a State Livestock Improvement Board to advise them on matters relating to animal welfare. The Government have recently appointed the non-official members of the State Livestock Improvement Board as honorary visitors of the different Livestock Farms in order to have the benefit of their advice on the proper management of the farm.

Whatever measures the Government may take and whatever be the amount of money they spend for the promotion of cattle welfare, tangible results can be achieved only if agriculturists and cattle breeders wholeheartedly co-operate with the Government and make the best use of the facilities offered to improve the condition of their cattle.

CONNEMARA PUBLIC LIBRA

CENNAI RĀJYATTIL KALNADAI APIVIRUTTI

சென்னை ராஜ்ய கால்நடை அபிவிருத்தி

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

சென்னை அரசாங்க செய்தி இலாகா

வெளியீடு

1955

விலை அணா 2.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

முன்னுரை

கால்நடைகளின் வளர்ச்சி கருதியும் நலன் குறித்தும் நம் ராஜ்யத்தில் நடைமுறையில் இருந்து வரும் நடவடிக்கைகளையும், திட்டங்களையும் பொது மக்களுக்கு அறிவிப்பதே இப்பிரசுரத்தின் நோக்கம். நம் நாட்டினைப் போன்ற வேளாண்மை நாட்டில் கால்நடைகள் மிகச் சிறப்பானதோர் பொறுப்பினைப் பெறுகின்றன. நமது செழிப்பும், பொருளாதார சுபிட்சமும் கால்நடைகளின் சிறப்பினைப் பொறுத்தேயுள்ளது. நமது கால்நடைகளின் சக்தி மகத்துவமானதெனினும் தரவளர்ப்புக் குறை, தகுதியற்ற உணவு, போதிய அக்கரையின்மை ஆகியவை, அவற்றின் தரத்தினைத் தாழ்த்தி விட்டன. அரசினரின் நிதி இடங்கொடாத நிலையிலும், கடந்த ஆறு ஏழாண்டுகளாக கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும், பசுக்களின் கறவைத் தன்மையைப் பெருக்கவும், எருதுகளின் வலிவினை அதிகரிக்கவும் அரசினர் அநேக திட்டங்களை மேற்கொண்டுள்ளனர் என்பதனை இப்பிரசுரத்தின் வாயிலாக நன்கு தெரிந்துகொள்ளலாம். விஞ்ஞான ரீதியில் வளர்ப்பதின் மூலமும், தக்க தீனியளிப்பதினாலும் கவனத்துடன் பாதுகாப்பதைக் கொண்டும் கால்நடைகளை அபிவிருத்தி செய்து, கால்நடைப் பராமரிப்பை இலாபகரமானதொன்ருக்குவது குடியானவனின் குறிக்கோளாக இருத்தல்வேண்டும். இதற்கென சில திட்டங்களை அரசினர் நிறைவேற்றுவதினுல் மட்டும் இந்த லட்சியத்தை அடைந்துவிட முடியாது. இதனை அடையும் பொறுப்பினில் பெரும்

பகுதி பொதுமக்களையே சார்ந்துள்ளது. அவர்கள் அரசினர் ஏற்படுத்தித் தந்திருக்கும் வசதிகளை நன்கு பயன்படுத்தி கால்நடை அபிவிருத்திக்காகவும், அதன் சுபிட்சத்திற்காகவும் முழுஅளவில் உழைப்பார்களென நம்புகிறேன்.

சென்னை,
1955-ம் ஞு ஜனவரிமீ 11உ.

எம். பக்தவத்சலம்,
விவசாய இலாகா மந்திரி.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

சென்னை ராஜ்ய கால்நடை அபிவிருத்தி

இந்தியாவின் கிராமியப் பொருளாதாரம் விவசாயியின், குடியானவனின் அன்றாட வாழ்க்கைக்கு உயிர் நிலையாயிருக்கும் கால்நடைச் செல்வத்தைத்தான் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பெரும்பான்மையான மக்கள் பசுவை தெய்வத் தன்மையுடையதாக கருதுகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. உயிரூட்டும் உணவான பாலின் உறைவிடமாக பசு விளங்குகிறது. நாட்டின் முதுகெலும்பாயிருக்கும் 75 சதவிகித மக்கள் விவசாயத்திற்கும் போக்குவரத்திற்கும் பயன்படுத்துகின்ற எருதுகளின் மூலாதாரமாக பசுக்கள் விளங்குகின்றன. இதைத்தவிர கால்நடைகள் பல்வேறு விதங்களில் உபயோகப்படுகின்றன. வெகுகாலமாகவே தொழு உரம்தான் உழு நிலத்தை மீண்டும் வளமுறச் செய்யும் சிறந்த மலிவான பொருளாயிருந்திருக்கிறது. கால்நடைகள் இறந்த பின்பும்கூட அதன் தோல், குளம்பு, கொம்பு முதலியவற்றோடு, மாமிசம் உணவாக மட்டுமல்லாமல் அதன் கொழுப்புப் பொருள் வியாபாரத்திற்கு பயன்பட்டு வர்த்தகத்துறையில் லாபகரமான மூலப்பொருளாகவும் இருந்து வருகிறது. முன்னுளிலிருந்தே, நம் நாட்டில் பாலும் தேனும் பாய்ந்தோடியதாகக் கூறப்படுகிறது. அந்த நாளில் கால்நடைகள் நன்கு கவனிக்கப்பட்டுச் செழிப்புடனிருந்ததையே இது குறிக்கிறது. வலிமைக்கோர் சின்னமாக எருது இருந்தது. பசுவும் எருதும் பரிவோடும் பக்தியோடும் வளர்த்துக் காப்பாற்றப்பட்டன. ஏராளமானத் தீனியும், மேய்ச்சல் நிலமும் இருந்த காரணத்தால் அவற்றிற்கு நன்கு தீனி கொடுக்கவும் பாதுகாக்கவும் முடிந்தது. ஆனால் காலபோக்கில் மக்கட்தொகை அதிகரிக்க மேய்ச்சல் நிலங்கள் விவசாயத்திற்காக மாற்றப்பட்டன. இதன் விளைவாக மேய்ச்சல் நிலங்களின் அளவு குறைந்து கால்நடைகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படலாயிற்று. இத்தகைய அழிவின் முன்னேற்றம் இன்னும் தொடருகிறது. இன்று உலகிலேயே, இந்தியாவில்தான் கால்நடைகள் அதிகமிருப்பினும், தரத்திலும், ஆரோக்கியத்திலும் அவைகள் தாழ்ந்தவை என்றே கூறலாம். இந்நாட்டிலுள்ள பத்தொன்பது கோடியே முப்பது

லட்சம் கால்நடைகளில் பத்தில் ஒரு பகுதி பயனற்றவையாக இருப்பது வியப்பிற்கும் சோகத்திற்கும் உரியதாகும். போதிய உணவின்மையும், முறையற்ற உற்பத்தியுமே இத்தகைய கீழ்நிலையில் கால்நடைகள் இருக்க காரணம்.

சென்னை ராஜ்யத்திலுள்ள கால்நடைகளும் இவ்வாறே இருக்கின்றன. ஒரு கோடியே 26 லட்சம் ஆடுகளையும், வெள்ளாடுகளையும் தவிர ராஜ்யத்திலுள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே நாற்பத்தாறு லட்சமாகும். இவைகளின் சுபிட்சத்தை ராஜ்ய மக்கள் மிகமுக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில், மக்கட்தொகையில் எண்பது சதவிகிதத்தினர் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலோடு கால்நடைகள் நெருங்கியத் தொடர்புள்ளவை. சுதந்திரம் பெற்றபின் மத்திய, மாகாண அரசாங்கங்கள் கவனம் செலுத்திய முக்கிய விஷயங்களில் கால்நடை அபிவிருத்தியும் ஒன்றாகும். வெகுகாலமாகவே இவ்விஷயத்தில் சிரத்தை காட்டிவரும் சென்னை அரசாங்கம் சுதந்திரம் பெற்றபின் ராஜ்யத்தில் கால்நடை செல்வத்தின் சுபிட்சத்தை அதிகரிக்கும் பொருட்டு தன் முயற்சிகளை இருமடங்காக்கியது.



பரிசுப் பெற்ற பசு

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956

கால்நடைகளின் அபிவிருத்திக்கான பல்வேறு விஷயங்களில் முக்கியமாக உயர் தரக் காளைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மூலம் தரத்தை உயர்த்தவேண்டும். போதுமான அளவில் சரிசம உணவு அவைகளுக்கு அளிப்பதோடு அவற்றை மடியச் செய்யும் நோய்களை அறவே கட்டுப்படுத்தவேண்டும்.

இந்தியா சுதந்திரம் பெறும் முன்பே கீழ்காணும் திட்டங்கள் கால் நடைகள் உயர்வு கருதி செயலாற்றப்பட்டு வந்தன:—

(1) பண உதவித் திட்டம்.
(2) காளைகள் விநியோகத் திட்டம்.
(3) ஜில்லா போர்டுத் திட்டம்.

ஹோசூரில் உயர்தர கால்நடை உற்பத்திக்காக அரசாங்கத்தா ரால் ஒரு பண்ணை நடத்தப்பட்டு வந்தது. சுதந்திரம் பெற்றபின் அரசாங்கத்தார் மேற்கூறியத் திட்டங்களை நடத்துவதோடு கால்நடை களின் தரத்தை உயர்த்தவும், அவை நோயின்மையுடன் இருக்கவும் வேறு பலத் திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

(1) நிதி உதவித் திட்டம்.—இத்திட்டப்படி குடியானவர்களோ அல்லது ஸ்தாபனங்களோ அங்கீகரிக்கப்பட்ட பொலி எருதுகளை சொந்தச் செலவில் வளர்த்து வந்தால் கிடாவிற்கு 220 ரூபாயும், எருதுக்கு 100 ரூபாயும் வீதம் வருடமொரு முறை நிதி உதவியாக அளிக்கப்படும். ஆனால் இதைப்பெற அவை குறைந்தது முதலாண்டில் 40 தரமும், தொடரும் ஆண்டுகளில் அறுபது தரமும் பொலிக்குப் பயன் பட்டிருக்கவேண்டும்.

(2) காளைகள் விநியோகத் திட்டம்.—இளங் காளைகளும் பரிசோதிக் கப்பட்ட எருதுகளும் தகுதியான பாதுகாப்பாளர்களிடம் அந்த வட்டார பொலிப் பணிக்கென இலவசமாக அளிக்கப்படுகின்றன. இவற்றின் வளர்ப்புக்காக பாதுகாப்பாளர்களுக்கு எந்தவித பணஉத வியும் அளிப்பது கிடையாது. ஆனால் பொலிப்பணிக்கு பணம் பெற அனுமதியளிக்கப்படுகிறது. மூன்றுண்டுகளுக்குப்பின் 180 தடவை பொலிபணிக்கென எருது பயன்படுத்தப்பட்டிருந்தால் அது பாதுகாப் பாளரின் உடமையாகிறது. 1947–48-ல் விநியோகிக்கப்பட்ட எருது களின் எண்ணிக்கை 16. 1954–55-ம் வருடத்தில் 151 எருதுகள் வரை விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

(3) **ஜில்லா போர்டு திட்டம்.**—உள்ளூர் மிருகவைத்திய அதிகாரியிடம் ஆலோசித்தபின் ஜில்லா போர்டுகள் ஜில்லாவினில் விநியோகிக்க எருதுகளை வாங்குகின்றன. இவ்விலையில் பாதிக்கு மேற்படாத தொகையை அரசாங்கத்தார் அளிக்கிறார்கள். இங்ஙனம் விநியோகிக்கப்படும் எருதுகள் ஆண் கால்நடை விநியோகிப்புத் திட்டச் சட்டப்படி பாது காப்பாளரின் உடமையாகும்.

ஹோசூர் கால்நடைப் பண்ணை.

ஹோசூர் ஆராய்ச்சிப் பண்ணையின் முக்கியப்பணி உயர்இன பொலி எருதுகளைப் பெருக்குவதுதான். முறையான உற்பத்திக்கும் முறையான உணவளிப்பிற்கும் திறமையான நிர்வாகத்திற்கும் ஒரு உதாரணப் பண்ணையாக இது பயன்படுகிறது. 1,635 எக்கராக்கள் கொண்ட மாகாணத்தில் மிகப்பெரிய பண்ணையான இதில் ஒரு பாகம் தீனிச்செடிகள் பயிரிடவும், புல் வளர்க்கவும், மேய்ச்சல் தரையாகவும் பயன்படுத்தப்படுகிறது. கலப்பு ரகங்கள் தவிர காங்கேயம், ஸிந்தி, கிர், ஹாலிக்கார் முதலிய ரகங்கள் இங்குள்ளன. 1–1–1947-ல் 1,041 கால்நடைகளே இருந்தன. ஆனால் 1–4–1954-ல் 1,368 கால்நடைகள் உள்ளன. இவைகள் எல்லாம் தேவைக்கேற்ப அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் பண்ணைகளுக்கும் பொலிப்பணிக்காக விநியோகிக்கப்படுகிறது. இதில் மிகுதியானவை பொதுமக்களுக்கு விற்கப்படுகிறது. இப்பண்ணையோடு ஒரு பாற்பண்ணையும் இணைக்கப்பட்டுள்ளது. இங்கே பால் பக்குவபடுத்தப்பட்டு அதனின்று தயாரிக்கப்படும் பொருள்கள் விற்பனைக்கு கிடைக்கும்.

இந்த ராஜ்யத்து கால்நடைகளிடத்து நிவர்த்தி செய்யவேண்டிய அடிப்படை குறை எதுவெனில் அதன் தரக்குறைவாகும். பசுக்களுக்கு போதுமான எருதுகள் இல்லையென்னும் உண்மையினை கால்நடை கணக்கெடுப்பு அறிவிக்கின்றது. ஆகவே இக்குறை நீக்க ஒரு திட்டம் வகுப்பது அவசியமென கருதப்பட்டது. இந்த திட்டம் கிராம மூலத் திட்டமென்று கூறப்படும். இதோடு செயற்கைச் சினை முறை நிலையங்களும், மருந்து வளர்ப்புப் பண்ணைகளும் திறக்க ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இது, 1952-53-ல் செயலாற்றப்பட்ட ஐந்தாண்டு திட்ட அபிவிருத்திக்குட்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

(1) **கிராம மூலத்திட்டம்.**—மூலக்கிராமம் என்பது 500 பசுக்கள் அல்லது காளைகள், அல்லது வளர்ப்பு வயதடைந்த இவைகளைக்

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1958
MADRAS



ஹோசூர் கால் நடைப் பண்ணை விருந்தினர் விடுதி



ஸிந்தி எருது

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956



கிர் எருது



ஹலிக்கார் காளை

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



ஹோசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள பால்பண்ணை.



ஹோசூர் கால்நடைப் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள தழைப் பயிர்,

கொண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்புள்ள கிராமங்கள் அடங்கிய பகுதி. ஒவ்வொரு கிராமத்திலும் பொலி எருதுகளை கொடுத்து அவற்றின் வளர்ப்பிற்காக பாதுகாப்பாளருக்கு மாதம் முப்பது ரூபாய் பண உதவி செய்யப்படுகிறது. மட்டரக காளைகளுக்கு விதையடிக்கப்பட்டு உயர்தர எருதுகளே பொலிப்பணிக்கு கிடைப்பதினால் சிறந்த வர்க்கங்கள் பெருக வழியேற்படுகிறது. உயர்இன கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, விஞ்ஞான முறையில் தீனியளிப்பு, வியாதி தடுப்புப் பற்றிய குறிப்புகள் வைத்திருப்பது இத்திட்டத்தின் ஏனைய முக்கிய அம்சங்கள். நான்கு மூலத்திட்ட கிராமங்கள் அடங்கிய ஒவ்வொரு குழுவிற்கும் செயற்கைச் சினைமுறை நிலையமுள்ளது. மத்திய நிலையத்தில் குறிப்பிட்ட இனத்தைச்சார்ந்த நான்கு அல்லது ஐந்து எருதுகளும் அதோடு இணைந்த கிராமங்களில் இரண்டு எருதுகளுமுள்ளன. தற்போது 28 மூலக்கிராமங்களும், ஏழு செயற்கை சினைமுறை நிலையங்களும் உள்ளன. அனுபவமுடைய ரணவைத்திய உதவியாளர்களாலும், கால்நடைப் பரிசோதனை அதிகாரிகளாலும் இவை நிர்வகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் வெற்றி பெரும்பாலும் பொதுமக்களின் ஆதரவைப் பொறுத்தேயுள்ளது என்பதைக் கூறத்தேவையில்லை. நிலஇயல்பு, சீதோஷ்ணநிலை முதலியவற்றிற்கேற்ப எருதுகளைத் தேர்ந்தெடுப்பது அதன் வெற்றிக்கு இன்றியமையாததொன்று. எருதுகள் உற்பத்திக்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்களைத் துணையாக்கிக் கொள்வது குறித்தும் ஒரு திட்டமொன்றை அரசாங்கத்தார் அங்கீகரித்துள்ளனர். மூலப்பண்ணை நிலையங்களை பாளையங்கோட்டை கால்நடைப் பண்ணையிலும், மதுரை நரேந்திரா பால்பண்ணையிலும், இடையக்கோட்டையிலுள்ள இடையக்கோட்டைப் பண்ணையிலும், தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள கீழ மூங்கிலடியில் காந்தி ஆசிரமத்திலும், கீழச்சேரியிலுள்ள கூட்டுறவு பால்விற்பனை சங்கத்திலும் ஏற்படுத்தியுள்ளனர். இந்த பண்ணைகளுக்குத் தேவையான எருதுகளையும், செயற்கைச் சினைமுறைக்கான கருவிகளையும் ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்டோர்க்கும் இரவலாக அளிக்கப்படுகின்றன. இப்பண்ணைகள் கால்நடைப் பரிசோதனை அதிகாரிகளாலும், ரணவைத்திய உதவியாளர்களாலும் நடத்தப்படுகின்றன. இந்தப் பண்ணைகளின் உரிமையாளர்களுக்கு உதவி நிதியளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் வருடா வருடம் ஏற்படும் செலவில் 75 சதவிகிதத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. 1954 மே மாதம் 11-வரை

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS

செயற்கைச் சினை முறை.



செயற்கைச் சினை முறையின் மூலம் உருவான சிறந்த கன்றுகள்.

இச்செலவின் எஞ்சிய 25 சதவிகிதத்தை பண்ணை உரிமையாளர்கள் ஏற்றுவந்தனர். 1-5-54 முதல் இச்செலவான 25 சதவிகிதத்தைச் சென்னை அரசாங்கத்தார் ஏற்றுள்ளனர்.

(2) **செயற்கைச் சினைமுறை நிலையங்கள்.**—புதிய விஞ்ஞானத் திறனுள செயற்கைச் சினை முறையை முதலாவதாக கையாளும் ராஜ்யங்களில் நம் ராஜ்யமும் ஒன்று. அநேக கிராமங்களில், சிறப்பான பொலி எருதுகள் கிடைப்பது அரிதாயிருப்பதால், செயற்கைச் சினை முறை உயர்தர கால்நடைகளை உற்பத்திசெய்ய உதவுகிறது. ஆரம்பத்தில் இந்த முறையினை கையாள கிராம மக்களிடையே விருப்பமின்மையும், மறுப்புணர்ச்சியும், அறியாமை வழிப்பட்ட மூடநம்பிக்கையும் ஏற்பட்டிருந்தும், அநேககிராம பகுதிகளில் இந்த முறையை அரசாங்கத்தார் வெற்றிகரமாக கையாண்டுள்ளனர். செயற்கைச் சினைமுறை நிலையங்களில், செயற்கைவழி சினையான பசுக்கள் உயர்ரக கன்றுகளை அளிக்கின்றன. 1948-49-ல் சென்னை மிருகவைத்தியக் கல்லூரியில் ஒரு நிலையம் ஏற்படுத்தியபோதுதான் இம்முறை இங்கு துவக்கப்பட்டது. இம்முறை பயனளிப்பது கண்டு மேலும் பல நிலையங்கள் கோயம்புத்தூரிலும், உதகமண்டலத்திலும், மதுரை நகரிலும் திறக்கப்பட்டன. சென்னையில் ஐந்து உபநிலையங்களிலும், கோயமுத்தூரில் மூன்று உபநிலையங்களிலும் இந்த வேலை நடந்துவருகிறது. 1953-54-ல் இந்நிலையங்கள் அனைத்திலுமாகச் செயற்கை வழிமுறையில் சினைப்படுத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை 10,337.

உதகமண்டலத்தில் மலையும் மழையும் உள்ள பகுதியில் கறவை பசுக்களின் தரஉயர்வு கருதி மேனாட்டு எருதுகளின் விந்துவினால் செயற்கைச் சினைமுறையைக் கையாளும் திட்டமொன்றினை அரசாங்கம் அங்கீகரித்துவிட்டது. உள்ளூர் கால்நடைகள் தரும் பாலின் தரத்தை உயர்த்துவதே இந்த ஏற்பாட்டின் நோக்கம்.

கால்நடைப் பண்ணைகள்.

1946-ம் ஆண்டுக்குபின் மேற்குறிப்பிட்ட சேலம் ஜில்லாவிலுள்ள ஹோசூர் பண்ணையோடு மேலும் நான்கு பண்ணைகள் திறக்கப்பட்டன :

(அ) **மலபார் ஜில்லா கால்நடைப் பண்ணை.**—1950-51-ல் மலபார் ஜில்லா கால்நடைப் பண்ணை ஏற்படுத்தப்பட்டது. 350 ஏக்கரா

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



கொயிலாப் பண்ணை—தென் கன்னடம்.



புதுக்கோட்டைப் பண்ணை.

பரப்புள்ள இது மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் திருவாழம் குன்று என்னுமிடத்தில் உள்ளது. இங்கே ஸிந்தி, ஸஹிவால், தர்வார், முர்ரா ரக எருதுகள் உள்ளன. இவைகளின் மொத்த எண்ணிக்கை 125.

(ஆ) **தென் கன்னட ஜில்லா, கோயிலா கால்நடைப் பண்ணை.**—சில ஸிந்தி எருதுகளோடு முர்ரா எருதுகளையும் கொண்ட இந்தப் பண்ணையும் 1950–51-ல் ஏற்படுத்தப்பட்டது. பண்ணையின் பரப்பு 760 ஏக்கர்கள். இதில் 100 ஏக்கர்கள் விவசாயத்திற்குரியது. இந்தப் பண்ணை 286 கால்நடைகள் கொண்டது.

(இ) **புதுக்கோட்டை கால்நடைப் பண்ணை.**—புதுக்கோட்டை சமஸ்தானம் நம் ராஜ்யத்தோடு இணைந்தபின் 1951-52-ல் இப்பண்ணையை அரசாங்கம் மேற்கொண்டு விட்டது. காங்கேயம், ஸிந்தி வகையருக்களுள்ள இப்பண்ணையின் கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 140. இதன் விஸ்தீரணம் 7 ஏக்கராவிற்கு மேற்பட்டது. இப்பண்ணையை மேலும் விஸ்தரித்து கலப்புப் பண்ணையாக்குவது பற்றி அரசினர் ஆலோசித்து வருகிறார்கள்.

(ஈ) **தஞ்சாவூர் ஜில்லா, ஒரத்தநாடு கால்நடைப் பண்ணை.**—1954-ம் ஆண்டில் தஞ்சாவூர் ஜில்லா, ஒரத்தநாடு கால்நடைப் பண்ணை ஸ்தாபிக்கப்பட்டது. சுமார் 280 ஏக்கராவிற்கு மேற்பட்ட பரப்பில் ஸிந்தி, அம்பலச்சேரி வகையை சேர்ந்த பசுக்கள், எருதுகள், எருமைகள் ஆக எண்பத்தைந்து கால்நடைகள் உள்ளன. தஞ்சாவூரை குறிக்கும் அம்பலச்சேரி இனத்தை பெருக்கி, கலப்புப் பண்ணையாக்குவது இந்தப் பண்ணையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

கிராம கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

எருதுகளின் வம்சஉறுதி குறித்து எடுத்துக்கொண்ட கிராம கால்நடை அபிவிருத்தித் திட்டப்படி வேண்டாத ஆண்கால்நடைகள் விதையடிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எருதுகளே பசுக்களுக்காக விடப்பட்டன. சுற்றுவட்டாரத்திலுள்ள கால்நடைகளும் வியாதியினின்று பாதுகாக்கப்பட்டன. பசுக்களுக்கும், கன்றுகளுக்கும் குறியிடப்பட்டு அவற்றின் வளர்ச்சி, பிறப்பு இவைப்பற்றிய குறிப்புகள் வைத்துக்கொள்ளப்பட்டன. பதிவு செய்யப்பட்ட பசுக்களின் கிடாரி கன்றுகளை நன்கு வளர்த்து பாதுகாப்பவர்களுக்கு இத்திட்டப்படி

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



ஓங்கோல் காளை.

ஐந்து ரூபாய் வெகுமதியளிக்கப்படும். கீழ்குறிப்பிட்டுள்ள ஐந்து இடங்களில் இத்திட்டம் செயலாற்றப்படுகிறது :—

(1) தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள சாலியமங்கலம்.
(2) ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள மல்லி.
(3) தென் கன்னட ஜில்லாவில் உள்ள கின்னி கோளி.
(4) கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள பல்லடம்.
(5) திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள முசிரி.

முன் குறிப்பிட்டுள்ள மூன்றும் கால்நடை பாதுகாப்பு இலாகாவினரின் கீழும் பின்னிரண்டும் கூட்டுறவு இலாகாவினரின் கீழும் உள்ளது.

மரத்துப்போனப் பசுக்கள் பாதுகாப்புத் திட்டம்.

எப்போதும் திண்மையான எருதுகள் இடைக்கச் செய்வது பிரச்சனையின் ஒரு அம்சமாகும். கறவை நின்றுவிட்ட காலத்தில் பசுக்களை காப்பது மற்றொரு முக்கிய அம்சம், சென்னை நகரில்

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956
MADRAS



கம்பாக்கத்தில் கன்று ஈன்றுள்ள பசுக்கள்.



புல் பண்ணை.

இப்பிரச்சனை மிகவும் நெருக்கடியான நிலையை அடைந்துள்ளது. சென்னைக்கு அதிகதூரமில்லாத கம்பாக்கம் காடுகளில் இந்த பசுக்களுக்காக அரசாங்கம் ஒரு பண்ணையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மாமிசத்திற்காக கொல்லப்பட்டிருக்கக்கூடிய பசுக்கள் காப்பாற்றப்பட்டன. பசுக்களுக்காக உயர்தர எருதுகளும் இப்பண்ணையிலிருக்கின்றன. 1–4–53-ல் 247 பசுக்கள் இப்பண்ணையிலிருந்தன. 1953–54-ல் அதிகமாக 274 பசுக்கள் வரை பண்ணையில் சேர்க்கப்பட்டன. கன்று ஈன்றபின் 199 பசுக்களும், கன்றுஈனும் முன்பே 55 பசுக்களும் அதன் உரிமையாளர்களிடம் ஒப்புவிக்கப்பட்டன. வருடமுடிவில் இருந்த பசுக்களின் எண்ணிக்கை 228.

இதோடு சென்னையிலுள்ள மரத்துப்போன எருமைகளின் பாதுகாப்புக்கான பண்ணையொன்று வட்டம்பேடில் நிறுவப்பட்டிருக்கிறது. சென்னை பால்விநியோக சங்கத்தினர் இதை நிர்வகித்து வருகின்றனர். இதற்கான ஆட்களையும், தீனிக்கானத் தொகையும் அளிப்பதின் மூலம் அரசாங்கம் நிதிஉதவி புரிந்துவருகிறது.

வெள்ளாடு செம்மறியாடுகளின் அபிவிருத்தி.

கால்நடைகளின் அபிவிருத்தியோடு, வெள்ளாடு செம்மறியாடுகளின் அபிவிருத்தியையும் ஒரு பகுதியாகக் கருதி முன்னேற்றுவதின் முக்கியத்துவத்தை சென்னை அரசாங்கத்தார் உணர்ந்துள்ளனர். ராஜ்யத்தின் உட்பகுதியில் வாழும் நடுத்தர குடியானவர்கள் இவ்வேலையை லாபகரமாக மேற்கொள்ளலாம். ஆண்இன கால்நடைத் திட்டப்படி இலவசமாக விவசாயிகளுக்கு பிக்கானிர், நீலகிரி, மாண்டேயா ஆடுகளை விநியோகிக்க மீண்டும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் கம்பளி ஆடுகளும் மாமிசத்திற்கான ஆடுகளும் அபிவிருத்தியடையும். வெவ்வேறு பண்ணைகளிலுள்ள முப்பது ஆடுகள் இதன்படி விநியோகிக்கப்படும். ஹோசூர் தாலூக்விலுள்ள உள்ளூர் ஆடுகளின் தரத்தை மாண்டையா செம்மறி ஆடுகளைக் கொண்டு உயர்த்தும்திட்டமும் செயல்முறையில் இருந்து வருகிறது. மதுரை, கோயமுத்தூர், கடலூர் ஆகிய இடங்களில், ஆடுகள் வைத்திருப்போரிடம் நூதனமான முறைகளில் கம்பளியை கத்தரிப்பதையும், தரம்பிரிப்பதையும் காண்பித்து பிரச்சாரம் செய்யும் திட்டமும் செயலாற்றப்பட்டு வருகிறது. நீலகிரி ஜில்லாவின் கம்பளி ஆடுகளின் தரத்தை உயர்த்த ஏற்கனவே அரசாங்கம் ஒரு செம்மறி

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956



ஹோசூர் பண்ணை (ஆடு மேய்தல்).

புல்வயலில் ஆடுகள் மேய்வதனையும் தலைமை அலுவலகத்தினையும்கொண்ட உதகமண்டல ஆட்டுப்பண்ணையின் பரந்த வெளி காட்சி.

ஆடு வெள்ளாடு பண்ணையை உதகமண்டலத்தின் அருகே நடத்தி வருகின்றனர். வெளிநாட்டு ஆடுகளோடு இணைப்பதின் மூலம் உள் நாட்டுத்தரத்தை உயர்த்திச் செம்மையான கம்பளிபெற ஒரு விரிவர்னத் திட்டமும், உதகமண்டலத்தில் ஒரு ரோமத்தரப்பிரிப்பு நிலையம் வைத்து பண்ணையை விரிவாக்கும் திட்டமும் அரசாங்கத்தாரின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

சேலம் ஜில்லாவில் ஒரு செம்மறியாட்டு பண்ணை ஏற்படுத்தும் விஷயமும் பரிசீலனையின் கீழ் உள்ளது.

கோழி வளர்ப்புப் பண்ணை.

கோழிவளர்ப்பு ஒரு லாபகரமானத் தொழில். இதற்கு ஆதரவு அளிப்பதின் முக்கியத்துவத்தை அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது. சென்னை கோழிகள் ஆராய்ச்சி நிலையத்திலும், கண்ணனூர் கோழிவளர்ப்புப் பண்ணையிலும், ஹோசூர் கால்நடை பண்ணையோடு இணைக்கப்பட்டுள்ள கோழிவளர்ப்பு அமைப்புகளிலும், கொய்லாவில் சில மிருகசிகிச்சை நிலையங்களிலும் அந்நிய இனக்



கோழிப் பண்ணை

கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அரசாங்கத்திடமிருந்து உதவி நிதி பெறும் அமெரிக்க ஆற்காடு மிஷனும், காட்பாடியில் சில மாதிரி கோழி வளர்ப்புப் பண்ணைகளை வைத்து நடத்திவருகின்றனர். உள்ளூர் கோழிப் பண்ணையின் அபிவிருத்திக்காக அரசாங்க நிலையங்கள் கோழிக் குஞ்சுகளையும், பொரித்துக்கொள்ள முட்டைகளையும் அளிக்கின்றன. அரசாங்கப்பண்ணையிலுள்ள கோழிக்கூட்டத்தை விருத்திசெய்ய அமெரிக்காவிலிருந்து ஒரு நாள் வயதுடைய ஆயிரம் உயர் ரகக் கோழிக்குஞ்சுகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் அண்மையில் அனுமதி யளித்துள்ளது. இந்தத்துறையில் தனிப்பட்டோர் லாபகர மாகத் தொழில் புரியமுடியும்.

வியாதித் தடை.

தொத்துநோய்களும், ஏனையநோய்களும் மனிதனைப் பீடிப்பது போலவே கால்நடைகளையும் பீடித்து, அதன் எண்ணிக்கையை குறைப் பதனை தடுப்பதே கால்நடை சுபிட்சத்தின் முக்கிய அம்சம். நோய் வாய்பட்ட மிருகங்களுக்கு சிகிச்சை அளிப்பது இந்த இலாகாவின் முக்கிய பணியாகும். தோற்றத்திலும் தன்மையிலும் கால்நடை வியாதிகளின் ஆரம்பமும் தன்மையும் பலவிதமானவை. அவற்றில் அதிகமானவை வெக்கை, கால் வாய் நோய், அடைப்பான், சப்பை நோய் முதலியன. இவற்றில் வெக்கை மிகவும் அபாயகரமானது. குடியானவர்களிடம் கால்நடை நோய்களை கட்டுப்படுத்தும் விதத்தை யும், கால்நடை பராமரிப்பை அறிவிக்கவும், இத்தகைய பல்வேறு வியாதிகளைத் தடுக்கவும் நாடு முழுவதும் ஆங்காங்கு மிருக சிகிச்சை சாலைகளும், வைத்தியசாலைகளும், சுற்றிவந்து உதவி அளிக்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலுகா விற்கு ஒரு சிகிச்சைநிலையமும் சுற்றிவரும் நிலையமும் இருக்க வேண்டுமென்பதே அரசாங்கத்தாரின் நோக்கம். தற்போது 65 சிறு வைத்தியசாலைகளோடு 86 பெரிய மருத்துவசாலைகளும், மிருக சிகிச்சை நிலையங்களும் 20 சுற்றிவரும் நிலையங்களும் இருக்கின்றன. 1954–55-ல் உடனடியாக நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலும் 7 சுற்றிவரும் நிலையங்கள் ஏற்படுத்தவும், 9 கால்நடை சிகிச்சைசாலைகள் அமைக்கவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. கால்நடை சிகிச்சை தலைமை நிலையங்கள் இரண்டிலும், ஹோசூர் கால்நடை பண்ணை யிலும் நோய் பரிசீலனை சாலைகள் திறக்க அனுமதியளிக்கப்பட்

டிருக்கிறது. கால்நடைகளிடையே கருச்சிதைவு நோய் தோன்றி பரவுவதை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் ஒரு திட்டம் நடைமுறையிலிருந்துவருகிறது. கால்நடைகளின் மலட்டுத்தன்மையின் காரணத்தை ஆராய ஒரு திட்டதையும் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்திற்கு பொறுப்பான கால்நடை இலாகாவை சார்ந்த ஒரு அதிகாரி பயிற்சிக்காக நார்வே நாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார். வெகுநாள் சக்தியுடனிருக்கும் அம்மைபாலினைத் தயாரிக்க நவீனமுறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் அக்கரையின்மை காரணமாக நோய்களை கட்டுப்படுத்துவதும், தடுப்பதும், மறையச் செய்வதும் சிரமமளிப்பதாயிருக்கின்றது. இதைத் தவிர்க்க அரசினர் முயன்றுவருகிறார்கள். பெரும் தொத்துவியாதிகளை உடனுக்குடன் நிவாரணம் செய்வதில் உதவ 1949-ல் நான்கு சுற்றிவரும் மோட்டார் வண்டிகள் அளிக்க உத்தரவிடப்பட்டது. தொற்றுநோய்கள் பரவுவதைத் தவிர்க்க, கால்நடை வியாதிச் சட்டப்படியும் வெக்கை நோய் சட்டப்படியும் அவசியம்போல் அம்மை குத்துவதற்காக கால்நடைகள் இடம்மாறுவதை தடுக்கமுயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. கால்நடைகளின் வியாதிகளை ஆராய்ந்தறிய மூன்று தனி அதிகாரிகளிருக்கின்றனர். தங்கள் வேலையைத் துரிதமாகச் செய்துமுடிக்க அவர்களுக்கு ஒரு சுற்றிவரும் பரிசீலனை சாலையுமளிக்கப்பட்டிருக்கிறது. மிருக வியாதிகளைப்பற்றிய ஆராச்சியும் நடந்துவருகிறது.

வெக்கை நோயை அரசாங்கம் ராஜ்யத்தினின்றும் ஒழித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அண்டை ராஜ்யங்களிலிருந்து நோய் பரவாமலிருக்க, வெளிப்புறமிருந்து வரும் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடுவதற்காக 20 வெளிப்புற சுகாதார காவல்நிலையங்களை அரசினர் ஏற்படுத்தியுள்ளனர்.

கால்நடைத் தீவனங்களின் அவசியம்.

மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு அவசியமானது என்பதைப் போலவே கால்நடைகளின் ஆரோக்கியத்திற்கான முக்கிய பல அம்சங்களில் உணவும் ஒன்று என்பதைக் கூறத்தேவையில்லை. கால்நடைகள் சக்திபுடைத்ததாய் விளங்குவதற்கான அடிப்படைக் காரணங்களில் ஏற்றத்தீனியளிப்பு ஒரு முக்கிய காரணமாகும். கிடைக்கும் மேய்ச்சல் நிலத்தையும், தீனியையும் பொறுத்ததே ஏற்ற உணவளிப்பு. இதனை அறிந்த அரசாங்கத்தார் ராஜ்யத்தில் கால்நடைகளுக்குத் தீனியளிப்பு

சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை ஆராய விவசாய இலாகாவிலிருந்தும், வன இலாகாவிலிருந்தும் இரண்டு தனி அதிகாரிகளை இதற்கென நியமித்துள்ளனர். 1952-ல் இவர்களுடைய அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. அவர்களின் சிபாரிசுகளில் சில நடைமுறையில் புகுத்தப்பட்டன. கால்நடைகளுக்காக பில்லிபயிறு, தாளூரச்செடி போன்ற தனிரகங்களை வளர்ப்பதின் அவசியத்தை மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர். உதாரணமாக கொல்லுக்கொட்டைப்புல்லை மக்கள் பெரிதும் விரும்பி வளர்க்கிறார்கள். அறியாமையினாலோ அல்லது வேறு காரணங்களாலோ கோடைகாலத் தீனிசேமிப்பு முறை அதிகமாக செயலில் இல்லை. கழிவுநீர் பண்ணையையொட்டி தீனிப்பொருள் பயிர் செய்வதின் அவசியம் இப்போது கவனிக்கப்பட்டுவருகிறது. பெரும் அளவில் கால்நடை வைத்திருப்போரும் விவசாயிகளும் கால்நடைக்கு போதுமான ஆகாரப்பொருட்களை வளர்த்துக்கொள்ள தாங்களாக முற்படவேண்டும். அரசாங்கத்தார் அவர்களுக்கு ஏற்ற ஆலோசனையையும், உதவியையும்தான் அளிக்கமுடியும். நகராண்மைக் கழகத்தாரையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் கழிவுநீர் பண்ணைகள் ஏற்படுத்தத் தூண்டுவதோடு தாங்கள் நடத்தும் பண்ணைகளிலும் நீர்பாசனத்திட்டங்களின்கீழ் தீனிப்பயிருக்கான முக்கியத்துவத்தை அளிப்பதை அரசாங்கத்தார் கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

பொதுமக்களும் ஒத்துழைப்பும்.

கால்நடை சுபிட்ச விஷயத்தில் தங்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக அரசாங்கத்தார் ஜீவதன அபிவிருத்திசபை ஒன்றை நிறுவியுள்ளனர் என்பது பற்றியும் குறிப்பிடவேண்டும். பல்வேறு ஜீவதனப் பண்ணைகள் இவர்களின் ஆலோசனைகளைப் பெற்று பயன் அடையும் பொருட்டு இச்சபையிலுள்ள உத்தியோகசார்பற்ற அங்கத்தினர்கள் கௌரவப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடை அபிவிருத்திக்காக அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், என்ன பொருட்செலவிட்டாலும் உருவான பலன் அடையவேண்டுமெனில் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் அரசாங்கத்தாரோடு மனப்பூர்வமாக ஒத்துழைத்து கால்நடை அபிவிருத்திக்காக அரசினர் ஏற்படுத்தித் தந்திருக்கும் வசதிகளை முழுஅளவுக்குப் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 JAN 1956